மென்று வைத்திருக்கிறோம். மாணவர்களை ஆங்கிலத்திலே பயில்கிறீர்களா தமிழிலே பயில்கிறீர்களா என்று கேட்கும்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற சங்கடங்கள் ஏற்படும். இரண்டு பாடங்களை எல்லோருமே தமிழிலே படிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம் மீதிப் பாடங்களை எல்லோருமே ஆங்கிலத்திலே படிக்க வேண்டுமென்று தான் வைத்திருக்கிறோம். இரண்டு மொழிகளிலும் தங்கள் கருத்துக்களை வெளியிட வாய்ப்பாக இருக்கும் என்று கருதித்தான் இந்த முறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்தச் சட்டப் பேரவையில் அமைத்திருக்கின்ற குழுக்களில்கூட, பொதுக் கணக்காய்வுக் குழு, மதிப்பீட்டுக் குழு போன்ற குழுக்களிலே தமிழிலே செய்திகள், எழுத்து மூலமாக வருவதில்லை அங்கத்தினர்களுக்கு. அரசாங்கம் —சட்டப் பேரவை அமைத்திருக்கின்ற குழுக்களில் தமிழிலேயே எல்லாவற்றையும் நடத்த அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி இதில் எப்படி வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பாலிடெக்னிக் பற்றிய மூலக் கேள்வி. இந்த மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் நேரடி தொடர்பில்லை. ஆனால், அந்த நிலைமைகளைக் கவனிக்க தமிழ் வளர்ச்சித் துறை அதைத் தீவிரப் படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பாலிடெக்னிக்குகளிலே தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கப் பணம் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பெண்களுக்குத் தனிப் பிரிவு.

*480 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கென பாலிடெக்னிக்குகளில் தனிப் பிரிவு ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பாலிடெக்னிக்குகளில்படிக்கும் பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கு அரசு உறுதி வழங்க ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரி களிலே, பள்ளிகளிலே படித்து வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் எந்த அரசும் எந்த நாட்டிலும் அப்படிச் செய்ய இயலாது ; இங்கும் செய்ய இயலாது. எதிர்காலத்தில் அவர்கள் வேலையைத் தேடிக்கொள்ள, அல்லது வேலையை உருவாக்கிக் கொள்ளப் பயன்படுகின்ற அறிவு ஆற்றலைத் தரத்தான் பள்ளிச்சாலைகள் பயன்படும். பாலிடெக்னிக்குகளில் படித்து வருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகளில் படித்து வருகின்ற வர்களுக்கு இப்பொழுது வேலைவாய்ப்பில்லை என்கிற நிலை ஏற்படவில்லை.

பெரியகுளம் கண்மாய் கரைச்சாலை.

*481 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

பழனி வட்டம், ஆயக்குடிப் பகுதியில் உள்ள பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலையைச் சீர்திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத்திட்டத்திற்கான முன்னிலை தீர்வான மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

புலவர் சி. பழனிச்சாமி : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரி பிகேஷன், சார். இந்தக் கேள்வியினுடைய எண் 7517. என்னுடைய பெயரில் வந்துள்ள இந்தக் கேள்வி, இன்றைக்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஏதாவது இருந்தால் அறையிலே வந்து கேளுங்கள். இதிலே துணைக் கேள்வி கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : செயலாளர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்..

புலவர் சி. பழனிச்சாமி : இந்தக் கேள்விக்கு செயலாளர் அனுப் பிய பதிலில் மாறுபாடு இருக்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இங்கு சொல்வது சரி யல்ல, அறையிலே வந்து கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : நான் கேட்ட மூலக்கேள்வி வேறு.